தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
&
இந்திய வானிலை துறை
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி
விருதுநகர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(01.03.2023 முதல் 05.03.2023)

அறிக்கை எண் 017/2023 தேதி. 28.02.2023

**தமிழகத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30$^{o}$ செ முதல் 37$^{o}$ செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 16$^{o}$ செ முதல் 26$^{o}$ செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19$^{o}$ செ முதல் 25$^{o}$ செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 5-9$^{o}$ செ ஆகவும் பதிவானது. தமிழ்நாட்டில் இந்த காலகட்டத்தில் வறண்ட வானிலையே பதிவாகியுள்ளது.

| கடந்த வார வானிலை (23.02.2023 முதல் 27.02.2023) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 05.03.2023 அன்று 08.30 மணியுடன் முடிவடையும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள் 1 23/02 | நாள் 2 24/02 | நாள் 3 25/02 | நாள் 4 26/02 | நாள் 5 27/02 | | நாள் 1 01/03 | நாள் 2 02/03 | நாள் 3 03/03 | நாள் 4 04/03 | நாள் 5 05/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 1 |
| 36 | 35 | 35 | 36 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 35 | 35 | 36 | 36 | 36 |
| 19 | 22 | 21 | 20 | 19 | குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 22 | 22 | 23 | 23 | 23 |
| 3 | 3 | 1 | 2 | 2 | மேகம் முட்டம் (ஆக்டா) | 3 | 2 | 2 | 2 | 4 |
| 61 | 69 | 60 | 61 | 60 | அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 80 | 80 | 80 |
| 26 | 37 | 24 | 36 | 37 | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 40 | 50 | 20 | 20 | 30 |
| 7 | 6 | 9 | 11 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 8 | 8 | 8 | 6 |
| 70/கிழக்கு | 70/ கிழக்கு | 50/ வட கிழக்கு | 50/ வட கிழக்கு | 70/ கிழக்கு | காற்று விசும் திசை | 50/ வட கிழக்கு | 20/ வட-வட கிழக்கு | 70/ கிழக்கு | 70/ கிழக்கு | 70/ கிழக்கு |

**விருதுநகர் மாவட்டத்திற்கு எதிர்பார்க்கப்டும் வானிலை (01.03.2023 முதல் 05.03.2023)**

வரும் நாட்களிலில் விருதுநகர் மாவட்டத்திற்கு வானம் ஒருளவு மேகத்துடன் காணப்படும். நாள் 1(01.03.2023) மற்றும் நாள் 5(05.03.2023) ஆகிய நாட்களில் மிக லேசான மழை பெய்ய வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலை 35-36$^{\circ}$செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 22-23$^{\circ}$செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 20-50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. 24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்றின் திசை வடக்கு-வடகிழக்கு மற்றும் கிழக்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- கடந்த வாரம் வறண்ட வானிலையே நிலவியது. நாள் 1(01.03.2023) மற்றும் நாள் 5(05.03.2023) ஆகிய நாட்களில் மழை பெய்ய வாய்ப்பு. எனவே, விவசாயிகள் உள்ளூர் வானிலை பொருத்து நீர்பாசனம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- மழைக்கு பெய்ய வாய்ப்புள்ளதால் அறுவடை செய்யப்பட்ட வேளாண் பொருட்களை பாதுகாக்கவும்.
- வெப்பநிலை காரணமாக காய்கறி பயர்களில் சார் உறிஞ்சும் பூச்சி தாக்கம் அதிகரிக்க வாய்ப்பு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏக்கருக்கு 10-15 மஞ்சள் ஒட்டுப் பொறியை சார் உறிஞ்சும் பூச்சி தாக்கத்தை கண்காணிக்வும், அசுவினி மற்றும் இலைத்துளைப்பான் கண்காணிக்க 5-10/ ஏக்கருக்கு நீல ஒட்டுப் பொறியைப் பயன்படுத்தும்மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- நிலக்கடலையில் அசுவினி, தத்துப்பூச்சி மற்றும் இலைப்பேனின் தாக்கம் குறைக்க வேப்பங்கொட்டை சாறு 5% தெளித்தல், இமிடாகுளோஃபிரிட் 17.8 ளுடு 100-125 மில்லி/ ஏக்டருக்கு தெளித்து கட்டுப்படுத்தவும்.
- கொய்யாவில் பழ அழுகல் நோய் அறிகுறிகள் கட்டுப்படுத்த. நோய்யின் வீரித்தை பொருத்து ஒரு முறை அல்லது இரண்டு முறை கார்பென்டாசிம் (0.1%) (அ) தயோபனேட் மீதைல் (0.5 கிராம் / லிட்டர்) தெளிக்கும்மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- மல்லிகை -பூக்கும் பருவம்- நிலவும் வானிலை மலர் கட்டிகள் பாதிப்புக்கு ஏற்றது. தியாமெதாக்சம் 25% WG @ 75 கிராம்/லிட்டர் அல்லது நோவலூரதைன் 3 மிலி/லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவும்.
- தென்னையில் நிலவும் வானிலையில் அனைத்து பருவம் - அனைத்து பருவம்- நிலவும் வானிலையில் ரகோஸ் ஸ்பைலிங் வெள்ளை ஈ தென்படுகிறது. எனங்கார்சியா ஒட்டுண்ணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நீர், மைதா கரைசலை தெளிப்பாக பயன்படுத்துதல். மேலும் மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து கொள்ளவும்.
- கர்ப்பமாக இல்லாத விலங்குகளுக்கு உடல் எடையில் 5மிகி,கிலோ என்ற திரவ ஆக்ஸிகுளோக்சமைடு முலம் குடற்பழு நீக்கம் செய்யவும். பி.பி.ஆர் மற்றும் குடல் நுண்ணுயிரிவிற்கு எதிராக தடுப்பூசி போடவும்.
- கோழிக்கான கோடைக்கால பரதாமரிப்ப - இட நெரிச்சலை குறைக்கவும். காலை , மாலை (குறைந்த வெப்பம்) நேரங்களில் தீவனமளிக்க வேண்டும். கொட்டகையின் பக்கவாட்டில் ஈரமான, நனைந்து சாக்கினை தொங்கவிடவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி